
# அரண்

## பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal)
ISSN: 2582-399X

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:6 Issue :23 July 2024*
கோட்டை:6 வாயில்:23 ஜூலை 2024

# அரண்

# Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*



## ஆசிரியர் குழு

முனைவர் ஸ்டீபன்
முனைவர் ஓ முத்தையா
முனைவர் உமாதேவி
முனைவர் இராஜேந்திரன் முனியாண்டி
முனைவர் மணிமாறன் சுப்ரமணியம்
முனைவர் சில்லாழி எஸ்.கந்தசாமி
முனைவர் பொ. சுரேஷ்
முனைவர் ப.தனஞ்செயன்
கலாநிதி ஸ்ரீவரதராஜன் பிரசாந்தன்
முனைவர் ஸ்வர்ணவேல் ஈஸ்வரன்
பேரா. முனைவர் வீ.செல்வகுமார்
முதுமுனைவர் *V.*வெங்கட்ராமன்
முனைவர் போ.கந்தசாமி
முனைவர் *P.*பாண்டிக்குமார்
முனைவர் ந. குமாரி
முனைவர் தயாநிதி
முனைவர் சந்திரசேகர்

### நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

### இதழாக்கம்

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

### முதன்மை ஆசிரியர்

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**



**+917299587879**

www.aranejournal.com
aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

# அகத்தினுள்


ஐங்குறு நூற்றில் நீர் நிலைகள்
பா. ரம்ஜான்

சங்ககால தமிழரின் பகுத்துண்டு பல் உயிர் ஓம்புதல்"பண்பாடு
முனைவர் ப. மணிகண்டன்

கவிதைக்கும் மெய்ப்பாட்டிற்கும் உள்ள தொடர்பு
செ. கயல்விழி

அறநெறி இலக்கியத்தில் தமிழர் மருத்துவம்
அ. குழந்தைசாமி

சிலப்பதிகாரம் காட்டும் நீர் வழிப்பயணங்கள்
சித்ரா.ரா

திருக்குறளில் வாய்மையில் சமரசம்
முனைவர் து. சிவசித்ரா

தமிழில் சொல்லகராதிகள் உருவாக்கமும் பயன்பாடும்
முனைவர் பூ. சேகர்

ஏகன் அநேகன்
அகல்யா தர்மலிங்கம்

Bhakti Marga of Saint Thyagaraja
R. Sudhalakxmi

The Evolution of Tattvas in Samkjya Philosophy
Varun Srivatsan

வேள் பாரிநாவலில் மன்னனும் மக்களும்
பொன். கனகா



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


யாரைக் கேட்டது இதயம் புதினத்தில் சமூகப்பார்வை
அ. சையதுஅலி பாத்திமா

என்.ஸ்ரீராம் கதைகளில் விளிம்பு நிலைமக்கள்
சுதா .மு

மேலாண்மை பொன்னுசாமி படைப்புகள் போற்றும் மானுட பிரவாகம்
கோ. சத்யா

வண்டிப் பாதை நாவல்காட்டும் இயற்கை மருத்துவம்
சு. சத்தியப்பிரியா

பொன்னீலனின் மறுபக்கம் புதினத்தில் சிறு தெய்வங்களும் அதன் வழிபாட்டுமரபுகளும்
திருமதி சு.வினோதா

ஒப்பியல் நோக்கில் சைவ கிறிஸ்துவ குருத்துவம்
பூபாலசிங்கம். தனேஸ்

Representation of Culture in English Language Textbooks
U. Thulasivanthana

பழங்குடி மக்களின் சித்திரைத் திருவிழா சடங்கு முறைகள்
கா. இராஜமாணிக்கம்

பழங்குடி மக்களின் மாட்டுப் பொங்கல் விழா சடங்கு முறைகள்
கா. இராஜமாணிக்கம்

தமிழகக் கல்வெட்டுகளில் கோயில் நிவேதன உணவுகள் - ஓர் ஆய்வு
முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்

கல்வெட்டுகள் வாயிலாக அறியவரும் மருத்துவ செய்திகள்
அ. குழந்தைசாமி



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி


தமிழ்

# வேள்பாரி நாவலில் மன்னனும் மக்களும்

# The King And The People in Velpaari Novel

**பொன்.கனகா,**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
வ.உ.சிதம்பரம் கல்லூரி, தூத்துக்குடி.

**ஆய்வுச் சுருக்கம்:**

இலக்கியங்கள் காலத்தின் வெளிப்பாடு என்பர். ஒரு குறிப்பிட்ட இனம் அல்லது குழுவின் வரலாற்றை அறிவதற்கு இலக்கியங்கள் ஆதாரமாக அமைகின்றது. சங்ககாலச் சமூகத்தை சங்க இலக்கியங்கள் அகம் மற்றும் புறப்பாடல்களில் புலப்படுத்துகின்றன. சங்க இலக்கியங்கள் மட்டுமல்லாது, சில இக்கால இலக்கியங்களும் பழங்கால தமிழ்ச் சமூகத்தைக் குறித்து எடுத்துரைக்கின்றன. வீரயுகம் எனப்படும் சங்ககாலத்தில் வாழ்ந்த மன்னன் மற்றும் மக்களை வீரயுகநாயகன் வேள்பாரி எனும் நாவல் காட்சிப்படுத்துகின்றது. இந்நாவலை ஆராய்வதன் வழி சங்ககாலத்தில் வாழ்ந்த பாரி மன்னனின் ஆட்சித்திறன், அம்மன்னனுக்கும் பறம்புமலைவாழ்மக்களுக்கும் இடையேயிருந்த நல்லுறவுநிலை, அவர்களின் குணயியல்புகள் ஆகியவற்றை அறிய முடிகிறது.

**திறவுச் சொற்கள்:**

வேள்பாரி நாவல், பாரி மன்னன், பறம்பு மக்கள், வாழ்வியல்

***Synopsis:***

*Literatures are the expression of time. It gave a source of knowledge about the history of particular group of people. Sangam literature reflects the internal and external society of sangam period. Not only sangam literature, some literatures written in this era also talks about the ancient Tamil society. The novel Veerayuganayakan Velpaari depicts the king and the people, who lived in the sangam era which is known as veerayugam. By examining this novel, one can learn about the Rulership of king Paari who lived in the sangam period, the good relationship between that king and the people of Parambu hills, and their characteristics.*

***Key words:***

*Velpaari novel, The king Paari, Parambu people, Life*

**முன்னுரை:**

இறைவன் படைப்பின் விந்தையைச் சிந்தித்தால் சிந்தனைக்கோர் அளவில்லை. ஓரறிவு உடைய மரஞ்செடி கொடிகள் முதல் ஆறறிவு உடைய மனிதன் வரை இப்புவியில் வாழ்கின்றன. ஆனால், இவற்றில் இருவினை அகற்றி, மும்மலமறுத்து, நாற்பேரும் பெற்றுய்ய இடம்பெற்றது மானுடப்பிறவி மட்டுமே. அத்தகு உயரிய பிறப்புபெற்ற மனிதர்கள், தங்களைச் சுற்றியுள்ள பிற உயிர்ச்சூழல்களோடு உறவுபூண்டு வாழ்ந்தனர். அப்படி கி.பி.2ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து, பல்வேறு புலவர்களால் சங்க இலக்கியங்களில் பாடப்பட்ட பாரியை, கி.பி.21ஆம் நூற்றாண்டில் கதைத்தலைவனாகக் கொண்டு “வீரயுக நாயகன் வேள்பாரி” என்ற நாவல்

படைக்கப்பட்டுள்ளது. இந்நாவல், சாகித்ய அகாடெமி விருது பெற்ற எழுத்தாளர் சு.வெங்கடேசன் அவர்களால் விகடன் இதழில் தொடர்கதையாக எழுதப்பட்டு, பின்னர் 2018ஆம் ஆண்டு விகடன் பதிப்பகத்தாரால் நாவல் இலக்கியமாக வெளியிடப்பட்டுள்ளது. அந்நாவல் காட்டுகின்ற, மன்னன் மக்கள் உறவுநிலை, மன்னனின் ஆட்சிநிலை, மக்களின் வாழ்க்கைநிலை இவற்றை ஆராய்ந்து வெளிக்கொணர்வது இவ்வாய்வின் நோக்கமாகும்.

**பறம்பின் கோமான் பாரி:**

வீரயுக நாயகன் வேள்பாரி எனும் நாவல், சாகித்ய அகாடமி விருது பெற்ற எழுத்தாளர் சு.வெங்கடேசன் அவர்களால் எழுதப்பட்டது. இந்நாவல் சங்க இலக்கியங்கள் கடையேழு வள்ளல்களுள் ஒருவராகக் போற்றும் பாரியையும், அவன் ஆட்சி செய்த பறம்பு மலையையும் பற்றி எடுத்துரைக்கின்றது. வீட்டிற்குள் இருக்க வேண்டிய உறவை விட, நாட்டையாளும் மன்னனுக்கும் அவன் ஆட்சி செய்யும் மக்களுக்கும் இடையே இருக்கவேண்டிய உறவு மிகவும் இன்றியமையாதது ஆகும். ஆளும் மன்னனுக்கும், ஆளப்படும் மக்களுக்கும் இடையேயான பிணைப்பு சரியாக இருந்தால் மட்டுமே அந்த நாடு செழிப்புற விளங்கும். அதுவே ஒவ்வொரு தனிமனிதனின் மகிழ்வுக்கும் வழிவகுக்கும்.

அரசாட்சி, குடியாட்சி, சனநாயக ஆட்சி என்று பல்நெடுங்காலந்தொட்டே, பல்வேறு ஆட்சியாளர்களால் மக்கள் ஆளப்பட்டு வந்தனர். மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒரு பகுதி பறம்பு மலை. அதனை ஆட்சி செய்தவன் பாரி என்றும், இவன் வேளிர் குலத்தின் நாற்பத்திரண்டாவது (42) குலத்தலைவன் என்றும் நாவல் எடுத்துரைக்கின்றது. பறம்புமலை என்பது தற்பொழுதைய நீலகிரி மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகள் சார்ந்த இடமாக இருந்துள்ளது.

**“முரசு கடிப்பு இகுப்பவும், வால் வளை துளைப்பவும்**
**அரசுடன் பொருத அண்ணல் நெடுவரை**
**கறங்கு வெள்ளருவி கல்லலைத்து ஒழுகும்**
**பறம்பின் கோமான் பாரியும்”[1] (புறம்.பா.158:1-4)**

என்ற புறநானூற்றுப் பாடலில், பெருஞ்சித்திரனார் குமணனுக்கு முன் மாண்டு போன கடையேழு வள்ளல்களைக் குறிப்பிடுகையில், பாரியை முதலாவதாகக் குறிப்பிட்டுள்ளார். சங்கும் முரசும் முழங்க முற்றுகையிட்ட அரசர்களோடுப் போரிட்ட பறம்பு மலையின் அரசன் பாரி என்று குறிப்பிட்டுள்ளார்.

**அதிகாரமில்லா அரசாட்சி:**

சங்க காலத்தில் மன்னராட்சி முறையானது, பெரும்பாலும் அதிகாரத்தை மையமிட்டதாக விளங்கியது. ஆனால் பறம்பு நாட்டில் பாரியின் ஆட்சி இதற்கு விதிவிலக்கு எனலாம்.

அதிகாரம் உயிர் பெறாத இடத்தில் அன்பு மட்டுமே தழைத்திருக்கும். எல்லாமே அன்பு மயமாகத் திகழ்கின்ற உலகின் ஆட்சியாளனாகப் பாரி விளங்குகிறான். பாரியின் ஆட்சியில் விதிகளும் இல்லை. தண்டைகளும் இல்லை. தலைவன் முதல் கடைநிலை வீரன் வரை, அனைவரும் சரிநிகர் சமமாகப் பார்க்கப்பட்டனர். இதனை, “நாடென்பது அரசும், அரச நியதியும்தான் என்று விதி செய்பவர்களுக்கு மத்தியில் நாடென்பது அரசற்ற மக்களின் ஆதி நிலம் எனப் பாரி நிலைநிறுத்தியுள்ளான்” (வே.நா.ப.95) என்ற நாவல் வரிகள் உறுதிப்படுத்துகின்றன.

**"சமூகச் சமநிலையை நிலைநாட்டும் பொருட்டுப் பெரும்பாலான சமுதாயங்கள் அவற்றிற்கு ஏற்புடைய அரசியல் அதிகார முறையைச் செயல்படுத்துகின்றன"[2] (பண்பாட்டு மானிடவியல், ப.550)** என்று குறிப்பிடுகிறார் பக்தவச்சல பாரதி.

அதிகாரம் மேலோங்கும் இடத்தில் அநீதிதான் தழைக்கும். அன்பு எங்கு மேலோங்குகிறதோ அங்குதான் சமநிலையும் மனிதமும் தழைக்கும். என்பதை நாவல் எடுத்துரைக்கும் பாரியின் ஆட்சி வாயிலாக அறிய முடிகிறது ஆனால், இன்றைய காலத்தில், அதிகாரம் மக்களை ஆட்டிவைக்கின்றது. அதிகாரத்தைப் பெறுவதற்கே ஒவ்வொரு மனிதனும் விழைகின்றான்.

**மன்னனின் மாண்பு :**

பறம்பு மலையில் வேளிர்குலம் மட்டுமல்லாது, மூவேந்தர்களின் சூழ்ச்சிகளால் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட பதினாறு குலங்களும் வாழ்ந்துள்ளன. இவை அனைத்திற்கும் தலைமையானது வேளிர்குலம். அதன் தலைவன் பாரி. அத்துனை உயரிய பொறுப்பில் தலைவனாய் இருந்தபோதும், பாரி தன் மக்களிடம் கொண்டிருந்த அன்பு அளவிடற்கரியதாக அமைந்துள்ளது.

"அவனோடு (பாரியோடு) அமர்ந்து கள் அருந்தும் நாள்தான் என் வாழ்வின் திருநாள்"(வே.நா.ப.38) என்று பறம்பின் வீரன் கூறுகின்றான். "உனக்குக் கள் ஊற்றிக் கொடுக்கும் இந்த நாள்தான் என் வாழ்வின் திருநாள்" (வே.நா.ப.117) என்று பறம்பின் கோமகன், பறம்பின் கடைநிலை வீரனிடம் கூறி களிப்புறுகின்றான்.

நாவல் எடுத்துரைக்கும் மேற்கண்ட நிகழ்வு, பாரியின் எளிமைக்கும், பறம்பு மக்கள் மீது அவன் கொண்டிருந்த அன்புமயமான உறவிற்கும் சான்றாக அமைகின்றது.

**"எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் ஓர் இனம்**
**எல்லோரும் இந்திய நாட்டு மக்கள்**
**எல்லோரும் ஓர் நிறை எல்லோரும் ஓர் விலை**
**எல்லோரும் இந்நாட்டு மக்கள்"[3] (பாரத சமுதாயம், சரணம் — 4)**

என்ற பாரதியின் வரிகளுக்கு எடுத்துக்காட்டாக பறம்புநாடு இருந்துள்ளது புலனாகின்றது.

நாட்டையே ஆளும் தலைவன், கடைநிலை வீரனைக்கூட இவ்வளவு நேசிப்பது பாரியின் அன்பையும் எளிமையையும் எடுத்தியம்புகின்றது. பாவனைகளும் அலங்காரங்களும் படியாத மானுட அன்பின் துய வடிவாகப் பாரி திகழ்கின்றான். தலைவனுக்கே உரித்தான உயர்ந்த பண்பு தான் என்ற ஆணவம் அகற்றி, நாம் என்று நினைப்பது. நாட்டிற்கே தலைவனானாலும் எளிமையை வலிமையாகக் கொண்டு வாழ்ந்ததாலே வரலாற்றின் பக்கங்களில் பாரி இன்றும் வாழ்கிறான். சகமனிதனை விடுத்து, ஆணவம் அகங்காரம் இவற்றையெல்லாம் அரவணைத்து அலையும் தற்கால மக்களுக்கு, பாரியின் எளிமையான தலைமைப் பண்பும், அரவணைக்கும் அன்பும் தக்க பாடமாகத் திகழ்கின்றது.

**மக்களின் பேரன்பு:**

மன்னன் எவ்வழியோ மக்களும் அவ்வழியிலேயே என்பதற்கிணங்க, தங்களின் தலைவன் பாரி மீது பறம்பு மக்கள் அதீத அன்பும், மரியாதையும் வைத்திருந்தனர். ஒவ்வொரு மக்களின் உள்ளங்களிலும் பாரி நிறைந்திருந்தான். பறம்பு வீரனொருவன் பாரி மீது கொண்டிருந்த அன்பை நாவல் வெளிப்படுத்தும் பின்வரும் உரையாடல் வழி அறியலாம்.

"நீலன் : எனக்குத் தெரியாது. நான் கடலைப் பார்த்ததில்லை.

கபிலர் : மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் கடலைப் பார்க்க வேண்டும். அது அவ்வளவு விரிந்து பரந்தது. அளவற்றது.

நீலன் : எங்கள் பாரியின் கருணையை விடவா?"

என்று நீலன் கபிலரிடம் கேட்பதாக நாவல் பகுதி அமைந்துள்ளது. பாரியின் கருணை கடலைவிடவும் பெரியது என்று பறம்பு வீரன் கூறுவதன் மூலமாக, அவன் பாரி மீது கொண்டிருந்த அளப்பறியா அன்பு வெளிப்படுகின்றது.

**"நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று**
**நீரினும் ஆரள வின்றே சாரல்**
**கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு**
**நெடுந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே"[4] (குறுந்.பா.3)**

என்ற குறுந்தொகைப் பாடல், தலைவன் தலைவி மீது கொண்ட காதலானது நிலத்தைவிடவும் நீரைவிடவும் வானைவிடவும் பரந்தது ஆழமானது என்கிறது. பறம்பு நாட்டின் வீரன், பறம்பின் தலைவன் மீது கொண்டிருந்த அன்பு சங்ககாலத் தலைவன் மீது தலைவி கொண்டிருந்த அன்பின் எல்லையோடு ஒப்புநோக்கதக்கதாய் உள்ளது.

சங்க காலத்தில், பிறநாட்டில் மன்னனுக்கும் குடிமக்களுக்கும் இடையே காண முடியாத அன்புமயமான உறவு, பறம்பு நாட்டில் இருந்துள்ளதை உணரமுடிகின்றது. எனவேதான் பறம்புமக்கள் மகிழ்வாய் வாழ்ந்துள்ளனர். ஆனால், இன்றைய காலத்தில் நாட்டிற்குள் மட்டுமின்றி வீட்டிற்குள்ளும் அன்பு இல்லாத நிலைதான் காணமுடிகிறது.

**ஆசைகளற்ற அழகிய வாழ்வு:**

இயற்கை என்பது இறைவன் மனிதனுக்கு கொடுத்திருக்கும் வரம் எனலாம். இந்த பரந்து விரிந்த உலகில் மனித உயிர்களைத்தவிர பல்வேறு விதமான மரங்கள், செடி கொடிகள், விலங்குகள், பறவைகள் மற்றும் இன்னும் பிற உயிரினங்கள் என அனைத்தும் வாழ மலைகள், காடுகள், நீர்நிலைகள் எனப் பலவற்றை மிக அழகாகப் படைத்துள்ளது இயற்கை. இயற்கையின்றி மனிதர்களால் ஒருநாள்கூட உயிர்வழ முடியாது. அத்தகைய இயற்கையோடு மனிதன் கொண்டிருக்க வேண்டிய உறவுநிலை என்பது மிகவும் அவசியமான ஒன்றாகும்.

பறம்புமக்கள் இயற்கையோடு உறவுகொண்டு, இயற்கைசார் வாழ்க்கை வாழ்ந்துள்ளனர். இயற்கையோடு அவர்கள் கொண்ட உறவினால், அவர்கள் வாழ்வின் செயல்பாடுகள் இயற்கையைப் போலவே சஞ்சலமின்றி அமைந்துள்ளது. "இயற்கை பிற உயிரினங்களுக்கு வகுத்த குண எல்லைகளைக் கடந்து மனிதன் போகவில்லை. மழை வந்ததும் செழித்தும், வெயில் காலத்தில் வாடித் துவண்டு, மலரும்போது நறுமணம் வீசி, கனியும்போது அள்ளி வழங்கி, உதிரும்போது மண்ணில் மக்கித் தம்மை உரமாக்கியபடி உதிரும் இந்த வாழ்க்கை கபிலரை மண்டியிட்டு வணங்க வைத்தது" (வே.நா.ப.97) என்று நாவல் உரைக்கின்றது.

பறம்புமக்கள் ஆசையின் பொருட்டு, சேமித்துச் சாகாமல், தேவைக்கு மட்டுமே உழைத்துள்ளனர். பறம்பு நாட்டில் வணிகம், இன்றைய நிலைக்கு மாறுபட்டுப் பார்க்கப்பட்டதை, "இயற்கை வழங்குகிறது. நாம் வாழ்கிறோம். இடையில் வாங்கவும் விற்கவும் நாம் யார்" (வே.நா.ப.114) என்ற நாவல் வரிகளின் மூலம் அறிய முடிகிறது.

**"பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும்"[5] (பழ.எ.15395)**

**"பணம் பாதளம் மட்டும் பாயும்"[6] (பழ.எ.15405)**

என்கிறது பழமொழி. ஆனால், பறம்புநாட்டு மக்கள் இதற்கு விதிவிலக்காக வாழ்ந்துள்ளனர்.

பறம்புமக்கள் இயற்கையின் பின்னால் ஓடியாடிக் களித்து வாழ்ந்துள்ளனர். ஆனால், இன்றைய மக்கள் பணம், பொருள், சொத்து சேர்க்க வேண்டுமென, இயற்கையை அழித்துவிட்டுப், நிலையில்லா பொருளாதாரத்தின் பின்னால் ஓடிக்கொண்டிருக்கின்றனர்.

**முடிவுரை:**

நாவல் வெளிப்படுத்துகின்ற பாரியின் ஆட்சித்திறன் அதிகாரத்தின் கரமாய் இல்லத்து அன்பின் அரணாய் இருந்துள்ளது அறியப்படுகின்றது. மன்னன் மற்றும் மக்களுக்குமான உறவுநிலை சமத்துவம், சுதந்திரம், சகோரத்துவம் எனும் உயரிய கொள்கைகளைப் பெற்றிருப்பது புலனாகின்றது. மன்னனின் உயரிய பண்பிற்கு ஏற்றவரே, மக்களும் தங்களது தலைவனிடம் பேரன்பு வைத்திருந்துள்ளனர் நாவல் வெளிப்படுத்துகின்ற இந்த நல்லதொரு உறவுநிலை இன்றைய காலத்திற்கும் இனிவரும் காலத்திற்கும் கட்டாயம் இன்றியமையாததாகும். ஒவ்வொரு தலைவனுக்கும் அவனது மக்களுக்கும் இவ்வுறவுநிலை இருந்திட்டால் அணைவரும் நலமாகவும் மகிழ்வாகவும் வாழலாம். பறம்புமக்களின் வாழ்க்கையில் இயற்கை இன்றியமையா இடம் பெற்றிருப்பதை உணரமுடிகிறது. நாவல் சுட்டிக்காட்டிய இயற்கையுடனான இவ்வறவுநிலை இன்றைய இயந்திர யுகத்திற்கு கற்பிதமாகத் திகழ்கின்றது. இன்றைய தலைமுறையினர் இயற்கையோடான இந்த உறவுப்பிணைப்பை பாதுகாத்தால் மட்டுமே நாளைய தலைமுறையினர் நலமாய் வாழமுடியும்.

**துணை நூற்பட்டியல்:**


1. வெங்கடேசன்.சு., வீரயுக நாயகன் வேள்பாரி, ஆறாம் பதிப்பு — 2021, விகடன் பதிப்பகம், அண்ணா சாலை, சென்னை — 600 002.

2.புலியூர்கேசிகன்(உ.ஆ), புறநானூறு மூலமும் உரையும், முதற்பதிப்பு-2010, சாரதா பதிப்பகம், ராயப்பேட்டை, சென்னை — 14.

3.பக்தவச்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், முதற்பதிப்பு -2019, அடையாளம் பதிப்பகம், புத்தாநத்தம், திருச்சி — 621 310.

4.தமிழவேள்.ச.மெய்யப்பன் (ப.ஆ), பாரதியார் கவிதைகள், எட்டாம் பதிப்பு-2007, தென்றல் நிலையம், சிதம்பரம் — 608 001.

5.முனைவர்.ரா.பிரபாகரன் (உ.ஆ), குறுந்தொகை மூலமும் எளிய உரையும், பதிப்பாண்டு 2017, காவ்யா பதிப்பகம், டிரஸ்ட்புரம், சென்னை - 24.

6.கி.வா.ஜகந்நாதன் (தொ.ஆ), தமிழ்ப் பழமொழிகள் தொகுதி-3, இரண்டாம் பதிப்பு- 2006, ஜெனரல் பப்ளிஷர்ஸ், மயிலாப்பூர், சென்னை — 600 004.

ARAN International e-Journal of Tamil Research
அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2024, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்-அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் அக்டோபர் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com